**23.06.2026–ல் ஆம் தேதிய சாதாரணக்கூட்டத்தில் ஒத்தி வைக்கப்பட்ட பொருட்கள்**

**பொருள் எண்.** 1

குளச்சல் நகராட்சி குடிநீர் வினியோக உபவிதிகள் இறுதி அங்கீகாரம் வழங்கும் செயல்முறையில் குறிப்பிட்டுள்ளபடி, 01.01.2022 முதல் குடிநீர் கட்டணம் மற்றும் வைப்புத் தொகை உயர்த்தப்பட்டு வசூல் செய்யப்பட்டு வருகிறது.

மேலும் குளச்சல் நகர்மன்றத்தின் 06.10.2021 ஆம் தேதிய 2578 எண் தீர்மானத்தின் படி குடிநீர் கட்டணம் மற்றும் வைப்புத் தொகையினை உயர்வு செய்து குடிநீர் வினியோக உபவிதிகளை திருத்தம் செய்வதற்கு நகர்மன்றம் ஒப்புதல் வழங்கி அதன் அடிப்படையில் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை ந.க.எண்.10049/2019/EA2 நாள் 29.11.2021 ஆம் தேதிய உத்தரவில் இறுதி அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில் குளச்சல் நகராட்சியின் மாமன்ற 06.10.2021 தேதிய தீர்மானத்தின் படி குடிநீர் கட்டணம் ஒவ்வொரு ஆண்டிற்கும் 5% –க்கும் குறையாமல் உயர்த்தி வசூலிக்கப்பட வேண்டும் என்று குடிநீர் வினியோக உபவிதிகளில் உள்ள நிபந்தனைகளில் தெரிவித்து இறுதி அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

குளச்சல் நகராட்சியின் குடிநீர் கட்டணம் பொது மக்களை பாதிக்கும் வகையில் உள்ளது என தெரிவித்து குளச்சல் அனைத்து நகர்மன்ற உறுப்பினர்கள் கொண்டு வந்த தீர்மானம் எண்.905, நாள் 29.10.2024 தேதிய தீர்மானம் நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு அனுப்பி வைக்கப்பட்டு இறுதி உத்தரவு எதுவும் பெறப்படாத நிலையில் 2025–2026–ம் ஆண்டிற்கு நகர்மன்ற தீர்மானம் எண்.40,41–ல் 2024–2025–ல் நிர்ணயம் செய்யப்பட்ட குடிநீர் கட்டணமே (ரூ.513/– காலண்டிற்கு) தொடர வேண்டுமென்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. ஆனால் குடிநீர் உபவிதிகளில் எந்தவித திருத்தமும் மேற்கொள்ளப்படவில்லை.

2026–2027–ல் குளச்சல் நகராட்சியில் குடிநீர் இறுதி உபவிதிகளில் தெரிவித்துள்ளப்படி குடிநீர் கட்டணம் 5% உயர்வு செய்யப்பட்டுள்ளது. (ரூ.538/– காலாண்டிற்கு) பொதுமக்களை பாதிக்கும் வகையிலும் கட்டணம் உயர்வு உள்ளது என நகர்மன்ற தலைவர் பெரும்பான்மை நகர்மன்ற உறுப்பினர்கள் கருதுவதால் பொதுமக்களின் நலன்கருதி நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.10049/2019/EA2, நாள் 29.11.2021–ல் உத்தரவிடப்பட்ட குடிநீர் வினியோக இறுதி உபவிதிகளில் தெரிவித்துள்ள ஒவ்வொரு ஆண்டிற்கும் 5% வரி உயர்த்தப்பட வேண்டும் என்று குறிப்பிட்டுள்ள நிபந்தனையினை திருத்தம் செய்து ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை 5% என்று குடிநீர் கட்டணம் உயர்வு செய்திட வேண்டும் என்று நிபந்தனையினை மாற்றி அமைத்து உத்தரவு பிறப்பிக்கவும், அதனை கன்னியாகுமரி மாவட்ட அரசிதழிலும் மாற்றம் செய்திட அனைத்து நகர்மன்ற உறுப்பினர்களால் தீர்மானம் கொண்டுவரப்படுகிறது. உரிய கருத்துருவினை நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு அனுப்பி வைக்க மன்றம் முடிவு செய்யலாம்.

**அலுவலக குறிப்பு** : மன்றம் தீர்மானம் செய்யலாம்.

**தீர்மானம் எண்.342,** சாதாரண கூட்டம் 29-10-2024 -ம் தேதி 905-ம் எண் தீர்மானத்தின் படி 2021-ல் உள்ளாட்சி கலைக்கப்பட்ட போது ஆண்டொன்றுக்கு 5% உயர்த்தி தீர்மானம் நிறைவேற்றப்பட்டு குடிநீர் வழங்கல் துறை அனுமதி வழங்கியுள்ளதை கவனத்தில் கொண்டு ஐந்து ஆண்டுக்கு 5% உயர்வு செய்ய அனைத்து நகர்மன்ற உறுப்பினர்களின் ஆலோசனின் படி, தீர்மானம் நிறைவேற்றி தமிழ்நாடு அரசின் பார்வைக்கு அனுப்பி வைத்திட தீர்மானிக்கப்பட்டது. அதன் பின் சாதாரண கூட்டம் 30-06-2025 தீர்மானங்கள் 40,41- என் தீர்மானத்தில் குடிநீர் கட்டணம் ரூ.513/-ல் உள்ளதை 5% உயர்வு செய்து ரூ.555/-க்கு மன்றத்தின் பார்வைக்கும், பதவிற்க்கும் வைக்கப்பட்டது. அதிலும் அனைத்து நகர்மன்ற உறுப்பினர்களின் ஆதரவோடு 2024-2025-ம் ஆண்டு வசூல் செய்யும் குடிநீர் கட்டணத்தை தொடர வேண்டும் என்று தீர்மான நிறைவேற்றிட ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டு இந்த தீர்மானம் பதிவு செய்யப்பட்டது. அதனை தொடர்ந்து சாதாரண கூட்டம் 23-6-2026 பொருள் எண்-1 தீர்மானம் எண் 329 குடிநீர் உயர்வு தொடர்பான தீர்மானம் ஒத்திவைக்கப்பட்டு, மறுபடியும் பல உள்ளிருப்பு போராட்டங்கள் மத்தியில் 25-6-2026 அன்று சாதாரண கூட்டத்தில் ஒத்திவைக்கப்பட்ட பொருள் எண்-1 தீர்மானம் எண் 342-ன் படி 2026-2027-ல் குளச்சல் நகராட்சியில் குடிநீர் உபவிதிகளில் தெரிவித்துள்ளபடி, குடிநீர் கட்டணம் 5% உயர்வு செய்து காலாண்டுக்கு ரூ.538/- நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இந்தத் தொகை பொதுமக்களை பாதிக்கும் வகையில் கட்டண உயர்வு உள்ளது என நகர்மன்ற தலைவர், பெரும்பான்மை நகர்மன்ற உறுப்பினர்கள் கருதுவதால் பொதுமக்களின் நலன் கருதி தற்போது நிர்ணயம் செய்துள்ள ரூ.538/- நிறுத்தி வைத்துவிட்டு ஏற்கனவே 2024-2025, 2025-2026-ம் ஆண்டு வசூல் செய்து வந்த காலாண்டு குடிநீர் கட்டணம் ரூ.513/- வசூல் செய்திடவும் (காலாண்டு வரி) பொதுமக்களின் நலன் கருதி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.10049/2019/EA2, நாள் 29.11.2021-ல் உத்தரவிடப்பட்டுள்ள குடிநீர் விநியோக இறுதி உப விதிகளில் தெரிவித்துள்ள ஒவ்வொரு ஆண்டுக்கும் 5% வரி உயர்த்தப்பட வேண்டும் என்று குறிப்பிட்டுள்ள நிபந்தனையினை திருத்தம் செய்து ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை 5% என்று குடிநீர் கட்டணம் உயர்வு செய்திட வேண்டுமென்று நிபந்தனையினை மாற்றி அமைத்து உத்தரவு பிறப்பிக்கவும், அதனை கன்னியாகுமரி மாவட்ட அரசிதழில் மாற்றம் செய்திட அனைத்து நகர்மன்ற உறுப்பினர்களால் தீர்மானம் கொண்டு வரப்பட்டு உரிய கருத்துருவினை நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு அனுப்பி வைக்க மன்றம் ஏகமனதாக தீர்மானிக்கப்படுகிறது.

**பொருள் எண்.** 2

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1, பாம்பூரி வாய்க்கால் வெள்ளமணல் பகுதியில் குடிநீர் வினியோகம் செய்யும் குடிநீர் பகிர்மான குழாய் சேதமடைந்துள்ளது. எனவே புதிதாக குடிநீர் பகிர்மான குழாய் அமைக்கும் பணி மேற்கொள்வதற்கு 18.06.2026 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்த தாரர் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி தொகை |
|---|---|---|---|
| 1 | திரு.சி.சந்திரசேகர் | 1.00 | மதிப்பீட்டுத் தொகையினை விட 0.51 % குறைவு |
| 2 | திரு.சி.ராஜேஷ் | | மதிப்பீட்டுத் தொகையினை விட 16.50 % அதிகம் |

**அலுவலக குறிப்பு** :

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.சி.சந்திரசேகர் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி உத்தரவு வழங்குவதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண். 1462/2026/இ1

**தீர்மானம் எண்.342, அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.3**

குளச்சல் நகராட்சி மார்க்கெட் அருகே அமைந்துள்ள நகராட்சிக்கு சொந்தமான கவியரசு கண்ணதாசன் வணிக வளாகம் அருகில் அமைந்துள்ள கழிப்பிடத்தில் ஏற்பட்டுள்ள பழுதை சரிசெய்யும் பணி மேற்கொள்வதற்கு ரூ.1.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்து 13.03.2026 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்த தாரர் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி தொகை |
|---|---|---|---|
| 1 | திரு.ஜோய் மொபில்ட் ஆபிரகாம் | 1.00 | மதிப்பீட்டுத் தொகையினை விட 0.1 % குறைவு |
| 2 | திருமதி.கில்டா | | மதிப்பீட்டுத் தொகையினை விட 3.89 % அதிகம் |

**அலுவலக குறிப்பு** :

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்த திருமதி.கில்டா ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி உத்தரவு வழங்குவதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.743/2026/இ1

**தீர்மானம் எண்.344, அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.4**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட 13–வது வார்டு, சீம்பிளிவிளை பிரதான சாலையில் உள்ள மழைநீர் வடிகால் ஓடை சேதமடைந்துள்ளதை சீரமைத்து பராமரிப்பதற்கு ரூ.1,60,000/– மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி தொகையினை இந்நகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதியின் கீழ் மேற்கொள்வதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** : நகராட்சி பொது நிதி என்பதால் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் அனுமதி பெற்ற பின்பு பணியினை மேற்கொள்ளலாம்.

ந.க.எண்.1835/2026/இ1

**தீர்மானம் எண்.345, நகராட்சின் வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து பணியினை மேற்கொண்டிட மன்றம் அனுமதி அளிக்கிறது.**

**பொருள் எண்.5**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட 16–வது வார்டு, சன்னதிதெரு பகுதியில் அமைந்துள்ள அருள்மிகு மேலங்கோடு இசக்கியம்மன் திருக்கோவில் முன்புறம் உள்ள மழைநீர் ஓடை சேதமடைந்து, மழை நீர் செல்லாமல் தேங்கி நிற்பதை சீரமைத்து பராமரிப்பதற்கு ரூ.1,30,000/– மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி தொகையினை இந்நகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதியின் கீழ் மேற்கொள்வதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** : நகராட்சி பொது நிதி என்பதால் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் அனுமதி பெற்ற பின்பு பணியினை மேற்கொள்ளலாம்.

ந.க.எண்.1834/2026/இ1

**தீர்மானம் எண்.346, நகராட்சின் வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து பணியினை மேற்கொண்டிட மன்றம் அனுமதி அளிக்கிறது.**

**பொருள் எண்.6**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட 22–வது வார்டு, துறைமுகத்தெரு பகுதியில் அமைந்துள்ள ஆரம்ப சுகாதார நிலையம் முன்பு மருத்துவ பயனாளிகளுக்கு வேண்டி சிமெண்ட் தளம் அமைப்பதற்கு ரூ.4,50,000/– மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, அனுமதி பெற்று பணியினை மேற்கொள்வதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** : நகராட்சி பொது நிதி என்பதால் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் அனுமதி பெற்ற பின்பு பணியினை மேற்கொள்ளலாம்.

ந.க.எண்.1413/2026/இ1

**தீர்மானம் எண்.347, நகராட்சின் வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து பணியினை மேற்கொண்டிட மன்றம் அனுமதி அளிக்கிறது.**

**பொருள் எண்.7**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட 22–வது வார்டு, துறைமுகத்தெரு பகுதியில் அமைந்துள்ள அங்கன்வாடியை சுற்றி சுற்றுச்சுவர் அமைப்பதற்கு ரூ.2,20,000/– மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி தொகையினை இந்நகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்வதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** : நகராட்சி பொது நிதி என்பதால் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் அனுமதி பெற்ற பின்பு பணியினை மேற்கொள்ளலாம்.
ந.க.எண். 1836/2026/இ1

**தீர்மானம் எண்.348, நகராட்சின் வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து பணியினை மேற்கொண்டிட மன்றம் அனுமதி அளிக்கிறது.**

**பொருள் எண்.8**

குளச்சல் நகராட்சிக்கு சொந்தமான காமராஜர் பேருந்து நிலையத்தில் வந்து செல்லும் பேருந்துகளின் கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு நாள் 18.06.2026 அன்று பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டவர்களின் விபரம் பின்வருமாறு,

| வ. எண் | இனம் | ஏலம் / ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டவர்கள் முகவரி | ஏலத்தொகை (ரூ.) | ஒப்பந்தப்புள்ளி தொகை (ரூ.) |
|---|---|---|---|---|
| 1 | காமராஜர் பேருந்து நிலையம் வந்து செல்லும் பேருந்துகளுக்கு நுழைவு கட்டணம் வசூல் செய்யும் உரிமம் | முருகப்பன் மார்க்கெட் ரோடு குளச்சல் | – | 75000 |
| | | ஜெ.மோகன்தாஸ் வடலிக்கூடம், தெருவுக்கடை | – | 89000 |
| | | சி. மனோகரன் மார்க்கெட் ரோடு, குளச்சல். | – | 80000 |

மேற்கண்டவற்றில் வரிசை எண்.2–ல் அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளித் தொகை கூடுதலாக உள்ளது. எனவே திரு.மோகன்தாஸ் என்பவருக்கு உரிமம் ஒப்படைக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.1808/2026/அ2

**தீர்மானம் எண்.349, அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு வரிசை எண்.2–ல் அளித்தள்ள ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.9**

குளச்சல் நகராட்சியில் பணிபுரியும் டெங்கு களப்பணியாளர்கள், ஒப்பந்த அடிப்படையில் பணிபுரியும் பணியாளர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்கள் பட்டியலில் Employees provident fund பிடித்தம் செய்து உரிய அலுவலத்தில் செலுத்த வேண்டும்.

மேற்கண்ட பணியாளர்கள் பட்டியலில் 2017 முதல் 2022 ஆம் ஆண்டு வரை EPF தொகையினை பிடித்தம் செய்து உரிய அலுவலகத்திற்கு செலுத்தாத காரணத்தினால் தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி நிறுவனம் நாகர்கோவில் அவர்களின் கடிதம் ந.க.எண்.2026012/MDNKL/79434/Recovery/cp–1/E33/2026 நாள் 16.04.2026 ன் படி Form No. EPF.cp.1 அசையும் மற்றும் அசையா சொத்தினை பறிமுதல் செய்ய இவ்வலுவலகத்திற்கு அறிவிப்பு நாள் 16.04.2026 சார்பு செய்யப்பட்டது. அதனை தொடர்ந்து இந்நகராட்சி கணக்குகள் பராமரிக்கும் பாரத மாநில வங்கி, குளச்சல் கிளைக்கு கணக்குகளை முடக்கம் செய்ய மேற்படி அலுவலகத்திலிருந்து அறிவிப்பு வழங்கப்பட்டது. இந்நகராட்சியால் தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி நிறுவனத்தை எதிர்த்து மதுரை உயர்நீதிமன்ற கிளையில் வழக்கு எண்.1432 of 2026 மற்றும் W.M.P(MD) No.10754 of 2026 ன் படி தொடரப்பட்டு தற்போது Stay order வாங்கப்பட்டது. மேற்படி Stay order வாங்கிய வகையில் வழக்கறிஞர் கட்டணம் ரூ.50,000/–ம் வரப்பெற்றுள்ளது. எனவே மேற்காணும் செலவு தொகையினை திரு.ஆதிமூலபாண்டியன் வழக்கறிஞருக்கு வருவாய் நிதியிலிருந்து வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்: 1380/2024/அ1

**தீர்மானம் எண்.350, அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்**.10

இந்நகராட்சிக்குட்பட்ட மாதா காலனி பகுதியில் நகர புல எண்.M1–11/10–ல் உள்ள இடம் திரு.ஜெறோம் அவர்கள் மகன் திரு.ஜெகன் காலின்ஸ் என்பவரக்கு சொந்தமான இடம் ஆகும். திருமதி.அல்போன்ஸா என்பவர் நகர புல எண். M1–11/10 –ல் உள்ள இடம் நீர்நிலை புறம்போக்கு என்று சென்னை உயர்நீதி மன்ற மதுரைகிளையில் WP(MD) No.10043/2026–ல் வழக்கு தொடரப்பட்டுள்ளது. எனவே வழக்கு சம்மந்தமாக மதுரை வழக்கறிஞர் திரு.ஆதிமூல பாண்டியன் அவர்கள் வழக்கை நடத்தியதற்கு ரூ.10,000/–ஐ வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.
ந.க.எண்.920 /2020/எப்1

**தீர்மானம் எண்.351, அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்**.11

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் துணை இயக்குநர், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு துறை ஆகியவர்களின் 18.06.2026 ஆம் தேதிய ஆய்வு கூட்டத்தில் பருவ மழை காலத்தில் டெங்கு தடுப்பு பணியில் எவ்வித சுணக்கமும் ஏற்படாமல் அனைத்து பகுதிகளிலும் நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டது.

எனவே காய்ச்சல் கண்ட பகுதிகளில் Indoor & Outdoor Fogging Machine மூலமாக முதிர் கொசுக்களை ஒழிக்க புகை மருந்து அடிக்க வலியுறுத்தப்பட்டது. முதிர் கொசுக்களை ஒழிக்க Outdoor fogging புகை மருந்து அடிக்கும் கருவியானது 2 எண்ணம் வாங்கி 6 ஆண்டுகளுக்கு மேல் ஆகி விட்டது. தற்போது மேற்படி இயந்திரம் அடிக்கடி பழுது ஏற்பட்டு பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது. தென்மேற்கு பருவமழை தொடர்ந்து பெய்து வருவதாலும், வரும் காலம் வடகிழக்கு பருவமழை காலமாக உள்ளதாலும் டெங்கு மற்றும் காய்ச்சல் பணிகளில் வருமுன் காத்திடும் நடவடிக்கைகளில் முதிர் கொசு ஒழிப்பு பணியானது மிகவும் இன்றியமையாதது என்பதனை கருத்தில் கொண்டு, பொது சுகாதார நலன் காக்கும் அத்தியாவசியம் கருதி Outdoor Fogging 2 இயந்திரங்கள் மற்றும் வாகனத்தில் பொருத்தி புகை மருந்து அடிக்கும் இயந்திரம் –1 (Vehicle Mounted Fogg machine) Gem (Gem – Government e market) விற்பனையாளர்களிடமிருந்து கொள்முதல் செய்ய இந்நகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து செலவினத்தை வழங்குவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** : பொது சுகாதார நலன் மற்றும் நோய் தடுப்பு நடவடிக்கைகளின் அத்தியாவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.1222/2023/இ1

**தீர்மானம் எண்.352, அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்**.12

குளச்சல் நகராட்சியில் உள்ள குடியிருப்புகள், வணிக நிறுவனங்கள் என மொத்தம் 9007 வரிவிதிப்புகள் உள்ளன. ஒரு டெங்கு தடுப்பு பணியாளருக்கு நாள் ஒன்றுக்கு 50 வீடுகள் வீதம் திங்கள் முதல் சனிக்கிழமை வரை 300 வீடுகளில் டெங்கு தடுப்பு பணிகள் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.2571/2017/J1 நாள் 28.11.2017–ல் அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேற்படி கணக்கெடுப்பின்படி இந்நகராட்சிக்கு 30 டெங்கு தடுப்பு பணியாளர்கள் தேவைப்படுகிறது. ஆனால் தற்போது மேற்படி பணிகளை மேற்கொள்ள 26 நபர்கள் மட்டுமே பணியில் ஈடுபட்டு வருகின்றனர். தற்போது தென்மேற்கு பருவமழை தொடர்ந்து பெய்து வருவதாலும், வரும் காலம் வடகிழக்கு பருவமழை காலம் என்பதனை கருத்தில் கொண்டு, கூடுதலாக 2 டெங்கு தடுப்பு பணியாளர்கள்(DBC) பணியமர்த்த மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** : நோய் தடுப்பு பணியின் அவசியத்தை கருத்தில் கொண்டு மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.1182/2024/எச்1

**தீர்மானம் எண்.353, அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்**.13

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட கீழ்கண்ட இடங்களில் ஏற்கனவே உள்ள மின்கம்பத்தில் மின் கம்பி இழுத்து தெரு விளக்கு அமைக்கவும், தமிழ்நாடு மின்வாரியத்திற்கு கடிதம் எழுதி கேட்பு கிடைக்கப்பெற்ற உடன் தொகை வழங்கவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

1. வார்டு எண்.4, புதுத்தெரு பகுதியில் ஏற்கனவே உள்ள 2 எண்ணம் மின் கம்பத்தில் மின் கம்பி இழுத்து மின் விளக்கு அமைத்தல்.
2. வார்டு எண்.4, மதனாவிளை செல்லும் பாதையில் ஏற்கனவே உள்ள 1 எண்ணம் மின் கம்பத்தில் மின் கம்பி இழுத்து மின் விளக்கு அமைத்தல்.

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.1574/2026/இ2

**தீர்மானம் எண்.354, அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

நகர்மன்றத் தலைவர்
குளச்சல் நகராட்சி